# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மாகாண மட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை ௳ 2013
## வரலாறு - I

தரம் – 11 | நேரம் : 1 மணித்தியாலம்

சுட்டெண் : .................................. | புள்ளிகள்

- ♦ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ♦ 1 - 40 வரையான வினாக்களில் தரப்பட்ட (1), (2), (3), (4) விடைகளில் மிகவும் சரியானதை தெரிவு செய்க.
- ♦ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் (X) எனும் புள்ளடி இடுக.

01) இறந்த காலத்தை மறந்து செயற்படுவது அத்திவாரமின்றி கட்டடமொன்றை கட்டுவதற்கு ஒப்பானது என்ற கருத்தை முன்வைத்த வரலாற்றாசிரியர்.
1. ஜி. எம். திரவெலியன் 2. ஈ. எச். கார்
3. ஜவஹர்லால் நேரு 4. மகாத்மா காந்தி

02) பின்வருவனவற்றில் ஆராமை நிர்வாகம் பற்றி குறிப்பிடும் கல்வெட்டு அல்லாதது.
1. களுதிய பொகுன கல்வெட்டு 2. அபயகிரி சமஸ்கிருத கல்வெட்டு
3. மிகுந்தலைக் கற்பலகை கல்வெட்டு 4. கல்பொத்த கல்வெட்டு

♦ **பின்வரும் தரவுகளின் உதவியுடன் வினா 3, 4, 5 ஆகியவற்றுக்கு விடையளிக்குக.**

A - கனிஸ்கன் B - தர்ம அசோகன் C - சமுத்திர குப்தன்
D - 2ம் சந்திரகுப்தன் E - பிம்பிசாரன்

03) 4வது பௌத்த மகாநாட்டுடன் தொடர்புடைய மன்னன்
1. A 2. B 3. E 4. D

04) சாஞ்சித் தூபியை அமைத்த மன்னன்.
1. A 2. C 3. B 4. D

05) குப்தர் காலத்தில் கலாசாரத்திற்கு எனத் தலைநகரம் உருவாக்கிய மன்னன்
1. C 2. D 3. B 4. E

06) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதன் இயற்கையோடு தன்னை இசைவாக்கி தன்னுடைய வாழ்வை இலகுபடுத்துவதற்கு பயன்படுத்திய முறை அல்லாதது.
1. கல்லாயுதங்கயைப் பாவித்தான்.
2. நெருப்பை உருவாக்கிப் பயன்படுத்தினான்.
3. இயற்கைப் பொருட்களைக் கொண்டு இல்லிடங்களை அமைத்தான்.
4. நீர்ப்பாசன அமைப்புக்களை மேற்கொண்டான்.

07) **நிரல் "A"** ல் அரசர்களும் **நிரல் "B"** யில் அவர்களின் ஆக்கங்களும் தரப்பட்டுள்ளன. **நிரல் A** யையும் **நிரல் B** யையும் இணைக்கும் போது அமையும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் "A" | நிரல் "B" |
|---|---|
| 1. துட்டகைமுனு | A. மகாமேகவனம் |
| 2. தேவநம்பியதீஸன் | B. அபயகிரி |
| 3. வலகம்பா | C. ரூவான் வெலிசாய |
| 4. மூத்தசிவன் | D. இசுறுமுனிய |
| | E. ஜேதவனராமய |

1. CDBA 2. CBDE 3. CBDA 4. EDAB

08) பின்வரும் A, B கூற்றுக்களை வாசித்து அவற்றுடன் தொடர்புடைய மன்னனைத் தெரிவு செய்க.
A. இலங்கை கிழக்குலகின் தானியக் களஞ்சியம் எனப் பெயர் பெற்றமை.
B. அங்கமதில்ல கால்வாயை அமைத்தல்.
1. 1ம் விஜயபாகு 2. 1ம் பராக்கிரமபாகு 3. நிஸங்கமல்லன் 4. வசபன்

09) **நிரல் " A "** யையும் **நிரல் " B "** யையும் இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் "A" | நிரல் "B" |
|---|---|
| 1. தாதுசேனன் | A. அபயவாவி |
| 2. 2ம் முகலன் | B. இராட்சதக் குளம் |
| 3. வசபன் | C. நாச்சியாத்தீவுக்குளம் |
| 4. மகாசேனன் | D. நொச்சிப் பொத்தான |
| | E. கவுடுலு |

1. ABCD 2. BCDE 3. BCED 4. BDCE

10) பின்வரும் குளத்தின் பகுதிகளில் எது குளத்தில் வண்டல் சேர்வதைத் தடுக்கின்றது.
1. வான்கதவு 2. அலைதாங்கி 3. சிறிய குளம் 4. போட்டா அணை

11) பின்வருவனவற்றில் பொருத்தமற்ற சோடி எது?
1. தோவரிக்க - வாயிற்காப்போன் 2. மகலேன - வர்த்தக அதிகாரி
3. படகாரிக - பொருளாளர் 4. மாபா - தக்கணதேச அதிகாரி

12) இலங்கையில் சிங்களவருடனும் நல்லுறவைப் பேணிய ஆரியச் சக்கரவர்த்தி.
1. குலசேகர ஆரியன் 2. ஜயவீரன் 3. குணவீரன் 4. வரோதயன்

13) பின்வருவனவற்றில் 2ம் பராக்கிரமபாகுவினால் எழுதப்பட்ட இலக்கியம்.
1. விசுத்தி மார்க்க சன்னய 2. மயூரசந்தேசய
3. குத்தில காவியம் 4. பூஜாவலிய

14) இந்தியாவில் டில்கி சுல்தானிய ஆட்சியின் போது அராபிய நாணயங்களை அறிமுகம் செய்த மன்னன்.
1. அலாவுதீன் கல்ஜி 2. முகமது பின் துக்ளக்
3. இல்துத்மிஸ் 4. குதுபுதின் ஐபெக்

15) இந்தியாவில் மொகலாயப் பேரரசு காலத்தில் அக்பரின் ஆட்சிக்குட்படாத இந்தியப் பிரிவுகள் எவை?
1. வட இந்தியா - தென் இந்தியா 2. வட இந்தியா - தக்கணதேசம்
3. வடமேற்கு இந்தியா - தக்கணம் 4. தக்கணதேசம் - தென் இந்தியா

16) பின்வருவனவற்றில் ஐரோப்பாவில் நிலமானியமுறையின் அம்சமாகக் கருதப்பட முடியாதது.
1. மதகுருமார் செல்வாக்குப் பெற்றிருந்தனர். 2. கலைஞர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.
3. அடிமைமுறை காணப்பட்டது. 4. சமய ஒருமைப்பாடு காணப்பட்டது.

17) கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மைக்கல் ஆஞ்சலோவின் படைப்புக்களைக் கொண்ட சரியான தொகுதி
1. மொனலிசா, பீற்றர்சிலை, மோசஸ்
2. இறுதித்தீர்ப்பு, சென்பீற்றர் தேவாலயம், மொனலிசா
3. இறுதி இராப்போசனம், மொனலிசா, மடோனா
4. இறுதித்தீர்ப்பு, பீட்டர்சிலை, மெடிசியின் உருவம்

18) A - கர்த்தர் எனக்கு உதவுவார் எனக்கூறி ஆறு ஆண்டுகள் தலை மறைவாகுதல்.
B - விவிலியத்தை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தல்.
C - மதசீர்திருத்தத்தின் விடிவெள்ளி என அழைக்கப்பட்டார்.
D - திருச்சபையால் உயிருடன் எரிக்கப்படுதல்.
மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் யோண் வைக்கிளிப்புடன் தொடர்புடைய கூற்றுக்களைத் தெரிவு செய்க.
1. B, C 2. A, B 3. C, D 4. B, A

19) **நிரல் □அ□** வை **நிரல் □ஆ□** வுடன் இணைக்கும் போது சரியான விடை

| **நிரல் □அ□** | **நிரல் □ஆ□** |
|---|---|
| 1. ரோசாப்பு யுத்தம் | A. ஸ்பானியா |
| 2. கோல் தேசம் | B. போர்த்துக்கல் |
| 3. அமெரிக்காவை கண்டுப்பிடித்தல் | C. இங்கிலாந்து |
| 4. கீழைத்தேசத்துக்கான மார்க்கத்தை அறிதல் | D. பிரான்ஸ் |
| | E. ஒல்லாந்து |

1. ABCD  2. CABD  3. CDAB  4. CDBA

20) சீதாவாக்கை இராச்சியத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமான மன்னன்
1. மாயாதுன்னை  2. 1ம் இராஜசிங்கன்  3. 2ம் இராஜசிங்கன்  4. 6ம் விஜயபாகு

21) மலையகம் மீது போர்த்துக்கேயர் மேற்கொண்ட இறுதிப்போர் எது?
1. தந்துரே  2. பலன  3. கனெதன்ன  4. கன்னொருவ

22) கீழ்வருவனவற்றுள் நெசவுக் கைத்தொழிலுக்கான கண்டுப்பிடிப்பினைத் தெரிவு செய்க.
1. பாதுகாப்பான விளக்கு  2. நீராவி இயந்திரம்
3. மியூல் இயந்திரம்  4. பெசமர் முறை

23) பின்வருவோரில் இத்தாலி ஐக்கியத்துடன் தொடர்புபடாத நபர்
1. மெற்றானிக்  2. யோசப் மசினி  3. கரிபால்டி  4. நெப்போலியன்

24) உணவு, நிலம், சமாதானம் என்ற சுலோகத்துடன் தொடர்புடைய புரட்சி.
1. ரஷ்யப்புரட்சி  2. பிரான்சுப்புரட்சி
3. அமெரிக்க சுதந்திரப்போர்  4. ஆங்கிலப்புரட்சி

25) இலங்கையில் பிரித்தானியக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்ட ஆண்டு.
1. 1796  2. 1802  3. 1815  4. 1798

26) 1848 கிளர்ச்சிக்கான உடனடிக் காரணமாக அமைவது
1. இராஜகாரிக முறை நீக்கப்பட்டமை.  2. தரிசு நிலச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
3. கம்சபா செயலிழந்தமை.  4. டொரிங்டனின் புதிய வரிக்கொள்கை

♦ **பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 27, 28 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.**

A - இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்படுதல்.
B - தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையில் பிரச்சினை உருவாகக் காரணமாதல்.
C - சட்டவாக்க கழகத்தில் முதன் முதலில் உத்தியோக சார்பற்றோர் இணைக்கப்படுதல்.
D - சர்வஜன வாக்குரிமை வழங்கப்படுதல்.
E - முதன்முதலில் மாகாண ரீதியில் பிரதிநிதிகளை தெரிவு செய்தல்.
F - மகாதேசாதிபதி முறை அறிமுகம்.

27) மனிங் அரசியல் யாப்புடன் தொடர்புடைய விடயங்களைக் குறிக்கும் எழுத்துக்கள்
1. D, E  2. D, F  3. B, C  4. B, F

28) “F” என்ற கூற்றுடன் தொடர்புடைய அரசியல் யாப்பு எது?
1. கோல்புறுக்  2. சோல்பரி  3. மனிங்  4. மக்கலம்

29) இலங்கையில் கோப்பிப் பயிர் செய்கையை அறிமுகப்படுத்திய ஐரோப்பிய நாட்டவர்.
1. பிரித்தானியர்  2. போர்த்துக்கேயர்  3. பிரான்சியர்  4. ஒல்லாந்தர்

30) தொழில் சங்கங்களின் தந்தை என அழைக்கப்படுபவர்.
1. A. E. குணசிங்க  2. கோ. நடேசஐயர்  3. D. S. சேனநாயக்கா  4. N. M. பெரேரா

31) சொற்பொழிவுக் கலையை தமிழில் புகுத்தியவர்
1. சேர். பொன். இராமநாதன்
2. சேர். பொன். அருணாச்சலம்
3. ஆறுமுகநாவலர்
4. பேர்ஸிவல் அடிகளார்

32) பொதுக்கற்பித்தல் திணைக்களத்தை பிரித்தானியர் காலத்தில் அறிமுகப்படுத்திய கல்விக் குழு எது?
1. டொனமூர் குழு
2. மோர்கன் குழு
3. கோல்புறுக் குழு
4. மியூறன் குழு

33) சைமன் குழுவின் வருகையினை எதிர்த்த போது பிரித்தானியக் காவல் துறையினரின் தடியடிக்கு இலக்காகி மரணமடைந்த இந்திய தேசிய காங்கிரசின் உறுப்பினர்.
1. அரவிந்தக்கோஸ்
2. லாலா லஜ்பதிறாய்
3. பிபின் சந்திரபோல்
4. கோபால கிஸ்ண கோகிலே

34) இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கப்பட்ட போது அங்கு இராசப் பிரதிநிதியாக (வைஸ்ராய்) இருந்தவர் யார்?
1. மவுண்ட் பேட்டன்பிரபு
2. கனிங்பிரபு
3. இராஜ கோபாலாச்சாரியார்
4. ஹென்றி மங்மேசன்மூர்

35) முதலாம் உலகப்போரின் முடிவில் வெற்றியடைந்த நாடுகள் தோல்வியடைந்த நாடுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளில் ஒன்று.
1. அத்திலாந்திக்சாசனம்
2. மியூனிக் உடன்படிக்கை
3. வேர்செல்ஸ் உடன்படிக்கை
4. மொஸ்கோ பிரகடனம்

36) கீழே தரப்பட்டுள்ள உலக மகாயுத்தங்களில் கடமையாற்றிய பிரித்தானிய தலைவர்களை கால ரீதியாக ஒழுங்குப்படுத்தும் போது கிடைக்கும் சரியான ஒழுங்கு.

A. வின்சன்ட் சேர்ச்சில்
B. லொஜிட் ஜோஜ்
C. கிளைமன் அட்லி
D. நெவில் சேம்பலின்

1. BADC
2. BDAC
3. DCAB
4. CBAD

37) தற்போது செயலிழந்துள்ள ஐக்கியநாடுகள் சபையின் 6 பிரதான உறுப்புக்களில் ஒன்று
1. சமூக பொருளாதாரசபை
2. பொதுச்சபை
3. பாதுகாப்புச்சபை
4. நம்பிக்கைப் பொறுப்புச்சபை

38) பின்வரும் விடைகளில் ஏதோ ஒன்று ஏனையவற்றுடன் பொருந்தவில்லை. அதனைத் தெரிவு செய்க.
1. I. L. O
2. மொசாட் (MOSSAD)
3. K. G. B
4. C. I. A

39) நீண்டகாலம் கியூபாவின் அதிபராக இருந்து நோய் காரணமாக இவ்வருடம் இறந்த சோசலிசத் தலைவர்.
1. பொய்ஸ்ட் சோம்பே
2. கேணல் கடாபி
3. பிடல் காஸ்சோ
4. ஹீயூகோசாவேஸ்

40) இலங்கையில் தேர்தல் தொடர்பான முறையீடுகளை விசாரிப்பதற்கு அதிகாரம் கொண்ட நீதிமன்றம்.
1. மாவட்ட நீதிமன்றம்
2. மேன்முறையீட்டு நீதிமன்றம்
3. நீதிவான் நீதிமன்றம்
4. உச்ச நீதிமன்றம்

*****